# Do Celebrate Meelad Shareef?

***In Urdu:*** **Allama Ahamed Yar Kahan Badyunni Naeemi Rahimahullahu.**

***Tamil:*** **Moulvi Shaikh S.M.H. Muhammad Ali Saifudeen Alim Quadiri Sufi.**

## மீலாது ஷரீப் கொண்டாடலாமா?

*உர்துவில்:* **அல்லாமா அஹ்மது யார்கான் பதாயூனி நயீமி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.**
*தமிழில்:* **மௌலவி அஷ்ஷெய்கு S.M.H. முஹம்மதலி ஸைபுத்தீன் ஆலிம் காதிரி ஸூபி அவர்கள்.**

**இப்பரச்சனையில் இரண்டு பாடங்கள் இருக்கின்றன.**

**ஒன்றாவது:- மீலாது ஷரீபு கொண்டாடுவது ஆகும் என்பது பற்றி.**

**இரண்டாவது: மீலாது ஷரீபு கொண்டாடுவதன் மீது எழும் ஆட்சேபணைகளும் அதற்கான தக்க பதில்களும்.**

## முதல் பாடம்

'மீலாது ஷரீபு'வின் எதார்த்தமான கருத்து என்ன? அதன் சட்டம் என்ன? என்பதை முதன்மையாகவும், பின் அதற்கான ஆதாரங்களை அறிந்து கொள்வதும் முக்கியமாகும்.

மீலாது ஷரீபின் எதார்த்தமான கருத்தாவது:- நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பரிசுத்தமான பிறப்பு செய்திகளையும், புனித மாதா ஆமினா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கருவுற்றிருந்த நிலவரங்களையும், 'நூரே முஹம்மதிய்யா'வின் அற்புதங்களையும், அண்ணலெம்பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கோத்திர பரம்பரை வரிசைகளையும், செவிலித்தாய் அன்னை ஹலிமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் வளர்ப்பில் நடந்த வரலாறுகளையும், வசனமாகவோ, கவழதைச் சரங்களாகவோ, நாம் கடைபிடித்துவரும் மௌலிது கிதாபுகளில் காணப்படுவது போன்று அரபி மொழியிலோ அல்லது வேறு மொழியிலோ எடுத்துரைப்பதாகும்.

தனிமையாகவோ அல்லது பலரை கூட்டியோ, உட்கார்ந்த வண்ணமாகவோ, அல்லது நின்றவண்ணமாகவோ எவ்விதத்தினாலும் இவ்வுயரிய சிறப்பியல்புகளை எடுத்துரைப்பது மீலாது ஷரீபேயாகும்.

இத்திருச்சபையை கூட்டுவதும் பூமான் நபியின் பிறப்பின் சிறப்பை சந்தோஷமானதாக வெளிப்படுத்துவதும், அப்பிறப்பு சம்பவம் வரும்போது பூக்கள் வாசைன திரவியங்கள் பரிமாறிக் கொள்வதும், முடிந்தபின் சீரனி-

நேர்ச்சை வழங்கிக் கொள்வதும் சுருங்கக் கூறின் சந்தோஷத்தை வெளிப்படுத்துவதாக எக்காரியங்கள் ஆகுமானதாகயிருக்கிறதோ அவைகளை எல்லாம் செய்வது முஸ்தஹப்பு-விரும்பத் தக்கதானதாகும். அனேகமாக இறையருளை வருஷிக்க செய்யும் காரணமாகும். பரக்கத்தை மிகுதமாக்க தூண்டு கோலாகவும் இருக்கின்றன.

اَللّٰهُمَّ رَبَّنَا اَنْزِلْ عَلَيْنَا مَائِدَةً مِّنَ السَّمَاءِ تَكُوْنُ لَنَا

عِيْدًا لِّاَوَّلِنَا وَاٰخِرِنَا

'அல்லாஹும்ம ரப்பனா அன்ஸில் அலைனா மாயிதத்தன் மினஸ் ஸமாயி தகூனுலனா ஈதன் லிஅவ்வலினா வ ஆகிறினா-(5:114) 'எங்கள் இரட்சகா! எங்கள் மீது வானத்திலிருந்து ஓர் அன்னப் பேழையை இறக்குவாயாக! (அந்நாள்) எங்களுக்கும் எங்கள் முன்னோர் பின்னோர்களுக்கும் ஈதாக-பெருநாளாக அமையும்' என்று நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் துஆ செய்தார்கள்.

நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அன்னப் பேழை இறங்கிய தினத்தை பெருநாள் தினமாகவே கொண்டாடியுள்ளார்கள் என்பது இவ்வசனத்தின் மூலம் வெளிப்படையாகும். இன்றளவும் கிறித்துவர்கள் அன்னப் பேழை இறங்கிய தினமான ஞாயிற்றுக் கிழமையை விசேஷ தினமாக கொண்டாடுகின்றனர்.

இவ்வன்னப் பேழையை விட அனந்தமான மடங்கு சிறப்புகள் வாய்க்கப் பெற்ற அண்ணல் கோமான் அஹ்மது முஸ்தபா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இப்பூவுலகிற்கு ஜனனமாகிய தினம் சுபதினமாகாதா! என்ன?

எனவே அவர்கள் ஜனனதினம் யவ்முல்ஈத்-பெருநாள் ஓர் நன்னாள் பொன்னாள். ஆம்! 'லைலத்துல் கத்ரு' எனும் புண்ணியம் பூத்துக் குலுங்கும் புனித இரவைக் காண பெருமானார் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பிறந்த அந்த இரவுதான் மேலானது என இமாம் அஹ்மது ஸாவி ரஹிமஹுல்லாஹ் கூறியுள்ளார்கள்.

இப்புண்ணியமிக்க இவ்வைபவங்களிலும் அந்நன்னாள்களிலும் குறிப்பாக ஹராமான காரியங்கள், அனாச்சாரங்கள் நடைபெறாமல் பாதுகாத்துக் கொள்வது கடமை. பெண்களை வரவழைத்து பாட்டுக் கச்சேரி போன்றவற்றை செய்வது பெருங்குற்றமாகும். (இது மீலாது ஷரீபின் நன்னோக்கத்திற்கே பெரும் இழுக்கு.)

பெண்களின் குரலை அன்னிய ஆடவர் கேட்பது ஆகாது. தொழுகையில் கூட பேஷ் இமாமுக்கு தவறு நிகழ்ந்து விட்டால் அதை சுட்டிக்காட்ட ஆண்கள் 'ஸுப்ஹானல்லாஹ்' என்று சொல்ல வேண்டும் என்றும், பெண்கள் 'ஸுப்ஹானல்லாஹ்' என்று குரல் கொடுக்கலாகாது என்றும், இடது முன்கரமேல் வலது உள்ளங்கையைக் கொட்டி ஓசை கொடுத்திட வேண்டுமென சட்டம் வகுக்கப்பட்டுள்ளது

இவ்வாறான அத்தியாவசியமான இந்நேரத்தில் கூட பெண்கள் குரலோசை வெளிவரக்கூடாதென இருந்தால் புனிதமிகு மீலாது விழா வைபவங்களில் பெண்களது பாட்டுக் கச்சேரிகள் எப்படி ஆகுமானதாகும்? மார்க்கத்திற்கு முரணான வீண் காரியங்கள் விளையாட்:டுக்கள், கேளிக்கைகள் நிழாத வண்ணம் மீலாது விழாக்கள் கொண்டாடப்பட வேண்டும். ஏனெனில் மீலாது ஷரீபும் ஓர் நல்ல வணக்கமாம்.

எனவே இதிலே அனாச்சாரங்கள் ஆகாத ஹராமான காரியங்கள் நடப்பதாக இருந்தாலே அவற்றை மட்டுமே தடுத்து நிறுத்த வேண்டும். மீலாது ஷரீபு விழாவையே தடுத்து விடக்கூடாது. அது வணக்கமாயிற்றே! வணக்கத்தை எப்படி தடுக்க முடியும்?

உதாரணமாக குர்ஆன் ஷரீபு ஓதுவது வணக்கமாகும். அதை மேளதாளங்களோடு ஓதப்பட்டாலோ அல்லது பிற ஆடவர் முன்னிலையில் இரைந்து பெண்கள் ஓதினாலோ, ஆகாத காரியங்கள் எவை எவை உண்டோ அவற்றை மட்டுமே தடுக்காமால் குர்ஆன் ஓதுவதையே தடுக்கலாமா? அதுவும் ஒரு வணக்கமாயிற்றே! வணக்கத்தை தடுப்பது கூடுமா? இதுபோலவேதான் மீலாது ஷரீபும் அதில் அனாச்சாரங்கள் நடந்தால் அதை மட்டும் தடுக்க வேண்டும்.

ஆனால் சில மூடர்கள் மீலாது விழா கொண்டாடுவதையே தடுத்து குப்ரு, ஷிர்க்கு எனக் கூறி பத்வாக்கள் வழங்கி இருப்பது குர்ஆன் ஓதுவதையே தடுப்பது போன்றதாகும்.

மீலாது ஷரீபு கொண்டாடுதல், திருக்குர்ஆன், திவ்விய நாயக வாக்குகள், உலமா பெருமக்களின் அமுத மொழிகள், அமரர்கள், நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்களின் வழிமுறைகள் ஆகியவைகளால் தரிபட்டிருக்கின்றது.

திருக்குர்ஆன் கூறுகின்றது:-

وَاذْكُرُوْا نِعْمَةَ اللهِ عَلَيْكُمْ

*வத்குரூ நி:மத்தல்லாஹி அலைக்கும்' உங்கள் மீது உள்ள அல்லாஹ்வின் உபகாரங்களை நினைவு கூறுங்கள்.* —அல்-குர்ஆன் (2:231)

உலகக் காரணர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அல்லாஹ் அவனியில் அவதாரமாக்கிய மிகப்பெரிய நி:மத்து-உபகாரமாகும். (இந்த நி:மத்துக்கு நிகரில்லை) நாம் கொண்டாடும் மீலாது ஷரீப் அந்த நி:மத்தை நினைவு கூறுவதேயன்றி வேறில்லை.

எனவே மீலாது ஷரீப் இந்த திருமறை வசனப்படி அமல் செய்வதாகும்.

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

*வ அம்மா பிநி.்.மதி ரப்பிக-பஹ்த்திஸ்-(நபியே) உமது இரட்சகனின் பேரருளை எடுத்துக் கூறுவீராக!* (93:10)

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இவ்வுலகிற்கு வருகை தந்தது எல்லா நி.்.மத்துக்களைக் காண பெரும் நி.்.மத்தாகும். அதையும் எடுத்துக் கூறும்படி அன்னாருக்கு இவ்வசனத்தின் மூலம் கட்டளை இட்டுள்ளான்.

ஆகவே மீலாது ஷரீப் இவ்வசனத்தின் நடைமுறைக்கும் உட்பட்டதாகும்.

உலக ரீதியில் உற்று நோக்கினும் சமுதாயத்திற்கு சேவை செய்த பெரும் தலைவர்கள், மேதைகள் பிறந்த தினத்தை அல்லது அரச பீடத்தில் அமர்ந்த தினத்தை அல்லது நாடு சுதந்திரம் அடைந்த தினத்தை சிறப்புமிக்க தினமாக, பெரும்விழாக் கோலமாக கொண்டாடுவதை இன்று உலகெங்கும் பரவலாக மலிவாக காண முடிகிறது.

இதை அனுமதிக்கின்ற, கொண்டாடுகின்ற சிரோன்மணிகள்(?) உலகத் தூதர், உத்தம வேந்தர், பூமான் நபிகள் கோமான் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது உதயதின விழாவான மீலாது ஷரீபை மட்டும் தடுப்பதேன்?

தித்திக்கும் திருமறையாம் திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் புனித மீலாது ஷரீபை கொண்டாடுவதைப் பாரீர்! சோதரீர்!

لَقَدْ جَاءَكُمْ رَسُوْلٌ

*‘லகத்ஜா அக்கும் ரஸுலுன்’-(ஜனங்களே!) உங்களுக்கு ஓர் தூதுவர் வருகை தந்துள்ளார்’*. இவ்வசனம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உதயத்தை விமர்சிக்கின்றது.

مِنْ اَنْفُسِكُمْ

‘*மின் அன்புஜிக்கும் -உங்கள் புறத்திலிருந்து’* என்பது எபருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயர் குலத்தின் மேன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

عَزِيْزٌ حَرِيْصٌ

*‘அஜுஜுன் ஹரீஸுன்’* என்பது நபிகள் நாயகத்தின் தனிச் சிறப்பியல்புகளை எடுத்துரைப்பதாக அமைகின்றது.

நாம் கொண்டாடும் மீலாது ஷரீபும் இம்மூன்று அம்சங்களைத் தானே தாங்கியுள்ளது.

لَقَدْ مَنَّ اللهُ عَلَى الْمُؤْمِنِيْنَ اِذْ بَعَثَ فِيْهِمْ رَسُوْلًا

*'லகத் மன்னல்லாஹு அலல் மு.ஃமினீன- இத் ப.ஃதபீ ஹிம் ரஸூலன்'* (3-164) மு.ஃ.மின்கள் மீது அவர்களிடையே (முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களான) தூதுவரை அனுப்பியபோது பேருபகாரத்தை அனல்லாஹ் செய்துள்ளான்.

هُوَالَّذِيْ اَرْسَلَ رَسُوْلَهُ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ

*'ஹுவல்லதீ அர்ஸல ரசூலஹு பில்ஹுதா வதீனில் ஹக்கி* (47:28) நேர்வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தைக் கொண்டும் தனது தூதுவரை அனுப்பினானே அத்தகைய (வல்லமை மிக்க)வன்.

இவ்வாறான ஆயத்துக்களை அனந்தமனந்தம் அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வாறு பெருமானாரின் பிறப்பியல்புகளை கூறுவது ஸுன்னத்தே இலாஹி-இறையோனின் வழியாகும்.

தொழுகையில் இத்தகைய இறைவசனங்களை பேஷ்இமாம் அவர்கள் ஓதும்போது, எங்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீலாது ஷரீபை தொழுகையிலேயும் கொண்டாடுவதாக அமைகின்றது. பேஷ்இமாம் அவர்கள் பின்னே ம.ஃமூன்களாக பெரும் திரளான கூட்டம் மீலாது ஷரீபினைக் கொண்டாடுகிறது. (ஸுப்ஹானல்லாஹ்)

(பெருமானாரின் பிறப்புச் செய்திகள் வருமிடத்து நிற்கக் கூடாது என்று விதண்டாவாதம் பேசும் தேவுபந்து கூட்டத்தினர்களின் பித்தலாட்டத்திற்கு, பேஷ் இமாமும் பின்னுள்ளவர்களும் நிலையின் நின்றவண்ணம் மீலாது ஷரீப் அதுவும் ஐவேளை தொழுகைதன்னில் கொண்டாடுவது ஓர் போராட்டம்)

அதுமட்டுமன்று திருக்கலிமா தன்னிலும் மீலாது ஷரீப் இருக்கிறது. ஏனெனில் கலிமாவில் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்- முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறையோனின் தூதர் என்று இணைந்திருக்கிறது. ரஸூல் என்றால் அனுப்பப்பட்டவர்-தூதர் என்று பொருள். அனுப்பப்பட்டவருக்கு வருகை தருவது அவசியம். எனவே பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வருகை அவதாரம் அதில் பொதிந்திருக்கிறது. இதுவே அசல் மீலாது ஷரீபாகும்.

உலக பொதுமறையாம் திருக்குர்ஆன் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீலாது ஷரீபை மட்டும் எடுத்துக் கூறிடவில்லை. முந்தைய நபிமார்களின் மீலாது ஷரீபுகளையும் எடுத்துக் கூறுகின்றது.

மர்யம் அத்தியாயத்தில், ஹழ்ரத் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் கர்ப்பமாகுதல், ஹழ்ரத் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஜனனமாகுதல் பிசவ வேதனையின்போது மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள்,...

يَالَيْتَنِيْ مِتُّ قَبْلَ هٰذَا

'*யாலைத்தனி மித்து கப்ல ஹாதா'*-அந்தோ! *இதற்கு முன்னமையே நான் மரணித்திருக்க வேண்டுமே!'* என்று மனமுருகி நின்றநிலை. அதற்கு

அமரர்களால் ஆறுதலிக்கப்படும் நிகழ்ச்சி, அப்போது என்ன உணவு உண்டார்கள் என்பது, அதன் பின் ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தம் சமுதாயத்தினர்களிடம் பாலர் பருவத்தில் உரையாடிய உரையாடுதல் போன்றவைகளை மிகத் தெளிவாகவே காண முடிகின்றது. இவை அனைத்தும் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் புனிதமிகு மீலாது ஷரீபாகும்.

இதே முறையில்தான் அன்னை ஆமினா நாயகி ரலியல்லாஹு தஆலாஅன்ஹா அவர்கள் கர்ப்பமுற்றதையும், அதுபோது நடந்த அற்புதங்களையும் பெருமானாரின் உதயமும், அப்போது நடந்த விந்தைமிகு காரியங்களை ககண்டதையும், கேட்டதையும் இன்னும் மர்யம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஆசியா லைஹிஸ்ஸலாம் அவர்கள், சுவர்க்கத்து சவுந்தரிய கன்னிகள் வருகை தந்திருந்ததையம் அதன்பின் நிகழ்ந்த கண்கொள்ளா காட்சிகளையும் தானே நாமும் மீலாது ஷரீபில் (கவிதையாகவும், வசன நடையாகவும்) எடுத்தியம்புகின்றோம். இது திருக்குர்ஆன் வகுத்துத் தந்த முறையாகும்.

இவ்விதமாகவே நபி மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களின் பிறப்பு, பாலூட்டப்பட்ட வரலாறு, வளர்ப்பு, ஆடுகள் மேய்க்கும் பொறுப்பேற்றல், கடிமணம் புரிதல், நபித்துவம் கிடைக்கப்பெறுதல் எல்லாவற்றையும் திருக்குர்ஆன் ஷரீபே எடுத்துக் கூறுகின்றது.

இவ்விதமே நம்பெருமானாரின் மீலாது ஷரீபும் அமைந்திருக்கின்றது.

‘மதாரிஜுன் நுபுவ்வத்’ என்ற கிரந்தம் இன்னும் இதுபோன்ற கிரந்தங்களில் காணப்படுகின்றது:-

அண்ணலெம்பெருமானாரின் வருகையைப் பற்றி முந்தைய நபிமார்கள் அனைவர்களும் தங்கள் தங்கள் உம்மத்தினர்கட்கு எடுத்துக் கூறியே வந்துள்ளார்கள். அதே வரிசையில்தான் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களும்,....

وَمُبَشِّرًا بِرَسُولٍ يَأْتِي مِن بَعْدِي اسْمُهُ أَحْمَدُ

*வமுபஷ்ஷிரன் பிரஸூலின்-ய.்.தீ-மின்ப.்.தி-இஸ்முஹு அஹ்மது.* ‘அஹ்மது’ என்ற பெயர் நாமம் பெற்று எனக்குப்பின் வருகை தருகின்ற தூதுவரைக் கொண்டு நன்மாராயம் சொன்னவனாக (நான் வந்துள்ளேன்) என்று சொன்னதை குர்ஆனே எடுத்தியம்புகின்றது.

பிள்ளை பிறந்து 7-ம் நாளில் பெற்றோர்கள் பிள்ளைக்கு பெயர் சூட்டுவார்கள். இது உலக நியதி. ஆனால் நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் 570 ஆண்டுகட்கு முன்பே, அவர் ‘அஹ்மது’ என்ற பெயர் பெற்றவராக இருப்பார் என்று குறிப்பிட்டுள்ளார்கள். (சுப்ஹானல்லாஹ்) இப்பெயர் சூட்டுவிழா எப்போது நடந்தேறியது என்பது இறையோனுக்கே வெளிச்சம். பெருமானாரின் பிறப்பை எடுத்துக் காட்டுவதாக இது அமைந்திருக்கிறதல்லவா? இதுதானே நாம் கொண்டாடும் மீலாது ஷரீபும்?

முந்தைய நபிமார்கள் அலைஹிமுஸ்ஸலாம் அவர்கள் தங்கள் உம்மத்தினர்களின் திருச்சபைகளில் 'அஹ்மது நபி ஸல்'லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வருகை தர இருக்கிறார்கள்' என்று பிரகடனப்படுத்தினார்கள். ஆனால் நாம், 'அவர்கள் வருகை தந்து விட்டார்கள்' என்று நமது மீலாது மன்றங்களில் வெளிப்படுத்துகின்றோம். அந்த நபிமார்கள் வருங்காலமிட்டும், நாம் இறந்த காலமிட்டும் சொல்கிறோம். கருத்து ஒன்றே-காலம் வேறுபடுகின்றது. இவ்வளவுதான் வித்தியாசம்.

எனவே நாம் கொண்டாடும் மீலாது சான்றோர்களான அன்பியாக்களின் ஸுன்னத்தாகும். வழிமுறையாகும்.

قُلْ بِفَضْلِ اللهِ وَبِرَحْمَتِهِ فَبِذَالِكَ فَلْيَفْرَحُوْا

*குல்-பி-பழ்லில்லாஹி வபி-ரஹ்மதிஹி பபிதாலிக பல்யப்ரஹு- அல்லாஹ்வின் அருள்பாக்கியங்களை கொண்டு(அம்மக்கள்) சந்தோஷம் கொண்டாடட்டும்.* (அல்-குர்ஆன் 10:58)

அருள் பாக்கியங்களை வெளிப்படுத்துவான் வேண்டி சந்தோஷக் கொண்டாட்டம் வேண்டும் என்பது ஆண்டவன் கட்டளை.

நம் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அருள்பிழம்பாக இருக்கும்போது அவர்களின் சிறப்பை வெளிப்படுத்துவான் வேண்டி மீலாது விழாக் கோலத்தில் புகுவது இக்கட்டளையின் அடிப்படையைச் சாரும். சந்தோஷம் கொண்டாடுவது இன்னதுதான் என்று குறிப்பிடாது பொதுப்படையாகவே தான் இறைவனும் கூறியுள்ளான். எனவே ஆகுமான சந்தோஷகரமான கொண்டாட்டங்களில் மீலாது ஷரீபு கொண்டாட்டமும் உட்படும் என்பது வெள்ளிடைமலை.

கோமான் நபி குவலயத்தில் ஜனனமாகின்ற புண்ணிய இரவில் வானவர்கள் அன்னை ஆமினா நாயகி ரலியல்லாஹு தஆலா அன்ஹா அவர்கள் வாழ்ந்த மனையின் தலைவாயிலில் நின்று பூமான் நபியின் மீது புனித ஸலாத்து சலாம் வாழ்த்து சொல்லிய வண்ணமாய் இருந்தார்கள். ஆனால் ஜென்ம விரோதி ஷைத்தான் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்தான்.

(ஆதாரம்: மவாஹிபுல் லதுன்னியா-மதாரிஜுன் நுபுவ்வத்)

மீலாது ஷரீபு கொண்டாட்டமும், பிறப்பின் போது நின்று மரியாதை செய்வதும், வானவர்களின் ஸுன்னத் வழிமுறை என்றும்,

அங்குமிங்கும் (மரியாதையில்லாமல்) சுற்றித்திரிவது ஜென்ம விரோதி ஷைத்தானின் நடைமுறை என்றும் இதன் மூலம் தெள்ளத் தெளிவாகின்றது.

வானவர்களின் மேற்கண்ட வழிமுறையை அல்லது ஷைத்தானின் நடைமுறையை தேர்ந்தெடுக்க யாவருக்கும் உரிமையுண்டு. உணருவீர்! சோதரீர்!!

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சஹாபாக் குழுவினர்கள் முன் மிம்பரில் நின்றவண்ணம், தங்களின் பிறப்பின் சிறப்பையும், தங்களின் கோத்திர கீர்த்தியையும் எடுத்தோதியிருக்கிறார்கள். எனவே இம்மீலாது ஷரீப் கொண்டாட்டமும் நாயகத் திருமேனி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தான வழிமுறையாகும்.

ஹழ்ரத் அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கோத்திரத்தை சிலர் குறை கண்டதாக கேள்விபட்டதும் (சீற்றமுற்று) பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திவ்விய சமூகம் வந்தடைந்தார்கள். (இந்நிலை கண்டதும்) உடன் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மிம்பர்படி மீது நின்று கொண்டு ‘நான் யார்?’ (தெரியுமா?) என வினவினார்கள். (அவண் திரளாக குழுமியிருந்த) தோழர்கள், ‘நீங்கள் அல்லாஹ்வின் திருத்தூதர்’ என விடை பகர்ந்தனர். பெருமானார் (தொடராக) கூறினார்கள்:

நான் அப்துல் முத்தலிபின் மகன் அப்துல்லாஹ்வின் புத்திரன் முஹம்மதுவாகும். அல்லாஹ் சிருஷ்டிகளைப் படைத்தான். அவைகளில் மேலான (மானிட)வர்களில் என்னை ஆக்கினான். பின் அவர்களை (அரபி அஜமி) என இரு வகுப்பினராக்கினான். அவர்களில் சிறந்த (அரபி) வகுப்பினர்களில் என்னை ஆக்கினான். பின் அவர்களை பல கோத்திரங்களாக ஆக்கினான். அந்த கோத்திரங்களில் சிறந்தோங்கிய (குறைஷி) கோத்திரங்களில் என்னை ஆக்கினான். பின் அவர்களை பல கிளைஞர்களாக்கினான். அவர்களில் சிறந்த (ஹாஷிம்) கிளையில் என்னை ஆக்கினான். எனவே கோத்திரத்தாலும், கிளையாலும் நான் சிறந்தவன் என்று சொன்னார்கள். (அறிவிப்பாளர்: அப்பாஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு, நூல்: மிஷ்காத் 513)

‘ஆதம் நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மண்ணாக இருக்கும்போதே அல்லாஹ்விடத்தில் ‘காத்தமுன்னபிய்யீன்’ என எழுதப்பட்டவன் நான். முதன்மையான என் காரியத்தை உங்களுக்கு அறிவித்து விடுவேன். இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் செய்த பிரார்த்தனையும் நானே. ஈஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்(தம் உம்மத்தினர்கட்கு முன்னமையே) சுபச் செய்தியாக சொன்ன தூதரும் நானே! என் தாய் என்னை பிரசவிக்கும் சமயம், ஷாம் நாட்டு கோட கோபுரங்கள் காட்சியளிக்கும்படியான பேரொளியை கண்டார்களே அதுவும் நானே!’ என நபிகள் கோமான் மலர்ந்தருளினார்கள்.

இந்த ஹதீதுகளில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் குலத்தின் மேன்மையும், பிறப்பின் சிறப்பையும் பாராட்டியுள்ளார்கள்.

இவ்வாறான ஹதீதுகளை நூற்றுக் கணக்கில் காட்டிட முடியும். நாம் கொண்டாடும் புனித மீலாது இவ்வகை பொன்மொழிகளை எடுத்துக் கூறுவதுதானே!

நபித்தோழர்களில் சிலர், சிலரிடம் சென்று பெருமானாரின் சிறப்பு இயல்புகளை எடுத்துக் கூறி மகிழ்வோம் வாரீர்! கேளீர்!! என விளித்துள்ளார்கள்.

அதாவு இப்னு யாஸர் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள் கூறுகின்றார்கள்:- நான் அப்துல்லாஹிப்னி அம்ரில் ஆஸ் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களை சந்தித்து 'தவ்ராத்' வேதத்தில் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்புத் தன்மைகள் குறித்து வந்துள்ளவற்றை அறிவிப்பீராக என வேண்டினேன்.

ஆம்! இதோ! அல்லாஹ்வின் ஆணையயாக திருக்குர்ஆனில் வந்துள்ள சிறப்பியல்புகளில் சில (அப்படியே) 'தவ்ராத்' வேதத்திலும் வந்துள்ளது என எடுத்துக் கூறி மகிழ்ந்திருக்கிறார்கள். –நூல்: மிஷ்காத்.

இதுபோலவே க.்.புல் அஹ்பார் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்களும் 'தவ்ராத்' வேதத்தில் வந்துள்ளவைகளை எடுத்தியம்பி மகிழ்வார்கள்.

எனவே மீலாது ஷரீப் கொண்டாடி மகிழ்வது சஹாபாக்களின் சுன்னத் வழி முறையாகிவிட்டது.

(நீங்கா துயரை ஈருல காரணருக்கு இழைத்துக் கொண்டிருந்த) வன் காபிர் அபூலஹபு என்பானை, அவன் மடிந்தொழிந்தபின் அவன் தன் குடும்பத்தில் ஒருவர் கனவில் அவசநிலையில் கண்டபொழுது, என்ன நடந்தது? என வினவ, அப்போது அபூலஹபு சொன்னான், உங்களைவிட்டு பிரிந்தபின் எவ்வித நற்பாக்கியத்தையும் நான் பெற்றதில்லை. எனினும் எனது சகோதரன் அப்துல்லாஹுக்கு ஆண்மகன் (முஹம்மது) பிறந்துவிட்டார் என்ற சுபச்' செய்தியை எனது அடிமைப் பெண் துவைபா எனக்கு அறிவித்த போது ஆனந்தப் பெருக்கால் எனது இந்த சுட்டு விரலால் சுட்டிக்காட்டி, 'துவைபா! இன்று நீ உரிமையாகி விட்டாய்' என்று துவைபாவை உரிமையிட்டேன். அதனால் இன்று இந்த கொடிய வேதனையிலும் கூட எனக்கு (பெருமானாரின் பிறந்த தினமான திங்கட்கிழமை தோறும்) இவ்விரலில் மதுரமான நீர் சுரக்கின்றது. நான் பருகி எனது தாகத்தை தீர்த்து வருகின்றேன் என கூறினான்.' (நூல்: புகாரி ஷரீப்)

திருக் குர்ஆனிலேயே...

تَبَّتْ يَدَا اَبِيْ لَهَبٍ

*'தப்பத்யதா அபீலஹபின்'*- என்று இடுபெயர் குறிக்கப்பட்டு (சபிக்கப்பட்ட) இந்த வன்காபிருக்கு –பெருமானன் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் தூதராக பிறந்து விட்டார் என்ற விசுவாச

அடிப்படையன்று, சகோதரனுக்கு ஆண்மகன் பிறந்தார் என்ற முறையில் மட்டுமே பெருமான் நபியின் பிறப்பை மீலாது ஷரீபை கொண்டாடி மகிழ்ந்த காரணத்தால், அதுவும் கொடிய வேதனைக்கிடையில் அமிர்தம் கிடைக்கின்றதென்றால்,

அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என்று நம்பி, அவர்கள் மீது அன்பு, பாசம் அதுவும் மெய் விசுவாசிகளாக இருந்து கொண்டு பூமான் நபியின் புனித மீலாதை கொண்டாடினால் வீண் போகிடுமா?

دوستاں را کجا کنی محروم
تو کہ با دشمناں نظر داری

‘விரோதிகளுடன் நீர் அன்பு காட்டும்போது அன்பர்களை எங்கனம் தடுப்பீர்? என்ற பாரசீக கவி ஒன்றும் இவண் உண்டு.

மீலாது விழா கோலம் பூணுவோருக்கும், மவ்லிது ஷரீப் ஓதுவோருக்கும் அதன்பெயரால் பொருள் ஈட்டுவோருக்கும் அபூலஹபின் இவ்வரலாறு பெர்ம ஆதாரமாக அமைகின்றது. அபூலஹபு காபிர், ஆனால் நாட விசுவாசிகள். பெருமானாருக்கு பாலூட்டிய துவைபா எனும் அடிமைப் பெண்ணை உரிமையிட்டதினால் அபூலஹபிற்கு இந்த பாக்கியம் கிடைத்தால்,

பாசத்தோடு கொண்டாடும் மீலாது ஷரீபுக்காரர்களுக்கு ‘என்ன பாக்கியம் கிட்டாமலா போய்விடும்? எனினும் புனித மீலாது விழாவில் பெருமானாருக்கு பிடிக்காத அனாச்சாரங்கள் நிகழ்ந்திடாமல் காத்திட வேண்டும்.’

(நூல்: மதாரிஜுன் நுபுவ்வத்-பாகம்-2)

எல்லா கால, இடங்களிலும் உலமா பெருமக்களும் அவ்லியாக்களும், ஷெய்குமார்களும், பொது ஜனங்களும் இப்புனித மீலாது ஷரீபை கொண்டாடியே வந்திருக்கிறார்கள். கொண்டாடியும் வருகிறார்கள்.

புனித ஹரமைன் ஷரீபைன்-மக்கா மதீனாவிலும் மிக முக்கியமாகவே இதை கொண்டாடியுள்ளார்கள்.

எந்நாட்டை நோக்கினும் இஸ்லாமிய பெருங்குடி மக்கள் மீலாது ஷரீபை கொண்டாடுவதை காண முடியும்.

இதில் ஏராளமான பிரயோஜனங்கள், தாராளமான பரக்கத்துக்கள் மிக இருக்கின்றன என இறையன்பர்களான அவ்லியாக்கள், அறிஞர் பெருமக்கள் எடுத்தியம்பி வந்துள்ளனர்.

مَارَآهُ الْمُسْلِمُوْنَ حَسَنًا فَهُوَ عِنْدَاللهِ حَسَنٌ

اَنْتُمْ شُهَدَاءُاللهِ فِى الْاَرْضِ

‘எதை முஸ்லிம்கள் நல்லதாக கருதுகின்றனரோ அது இறையோனிடமும் நல்லதாகவே இருக்கும்.’ ‘பூமியில் நீங்கள் அல்லாஹ்வின் சாட்சியாளர்கள்’ என்ற நாயகத்தின் திருவாக்கும்,

لِتَكُونُوا شُهَدَاءَ

*‘லிதகூனுஷுஹதாஅ’-(முஸ்லிம்களே!) நீங்கள் சாட்சியாளர்கள் ஆவதற்காக’* என்ற திருவசனமும் மேற்கண்டவற்றிற்கு ஆதாரமாக அமையும். இதனால் மீலாது ஷரீப் கொண்டாடுவது முஸ்தஹப்பாகும்.

(பெருமானர் பிறந்த) ரபீவுல் அவ்வல் மாத மாண்பு பற்றி, ‘ஒவ்வொரு வருடமும் இம்மாதத்தில் சந்தோஷத்தை வெளிப்படுத்த நாம் பணிக்கப்பட்டுள்ளோம்’ என்று ஷெய்கு முஹம்மது ழாஹ்ரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகின்றார்கள்.

(ஆதாரம்: மஜ்மவுல் பிஹார், பக்.550)

விலக்கப்பட்ட காரியங்கள் இடம் பெறாமல் மீலாது விழா கொண்டாடுவது, மௌலிது ஓதுவது பெருமானாரை கண்ணியப்படுத்துவதிலுள்ளது என்றும் பெருமானாரின் பிறப்பிற்கான நன்றிக் கடனை வெளிப்படுத்துவது முஸ்தஹப்பு-விரும்பத்தக்கது என்றும் இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்.

(தங்களது கூற்றிற்கு ஆதாரமாக) மேலும் கூறுகின்றார்கள்:

‘பித்அத்துன் ஹஸனா-நூதனமாக நல்லனுஷ்டானம் நத்பு சுன்னத்தென்பது ஏகோபித்த கருத்தாகும். மௌலிது ஜனன விழா கொண்டாடுவதும், அதற்காக ஜனங்களை கூட்டுவதும் பித்அத்துன் ஹஸனா-நல்லனுஷ்டானமாகும் என்று இமாம் இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் நவின்றுள்ளார்கள்.

‘முந்தைய மூன்று நூற்றாண்டில் இதை எவரும் செய்ததில்லை. பின்புதான் தொடங்கலலாயிற்று. அன்று முதல் எல்லா துருவங்களிலும், நாடுகளிலும், பட்டிதொட்டிகளிலும் மௌலிது ஓதுவதும் மீலாது கொண்டாடுவதும் அதையொட்டி வகைவகையான தான தருமங்கள் செய்யப்படவும் முக்கியத்துவமளிக்கவும் இதனால் அவர்கட்கு பெரும் சிறப்பும் செல்வமும் கிடைக்கவும் ஆரம்பமாயின என்று சகாவி இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியுள்ளார்கள்.

‘நிச்சயமகா இது (மௌலிது ஓதுவது, மீலாது கொண்டாடுவது) அவ்வருடத்திற்கு ஓர் பாதுகாப்பு. நாட்ட தேட்டம் உண்டாகிவிட்டது என்பதற்கு ஓர் முன்னோடியான சுபச் செய்தி. மன்னர்களில் இதை புதிதாக உண்டாக்கியவர் ‘அர்பல்’ எனும் ஊரரசர் தான் அவருக்கு பெருமானரின் பிறப்பு வரலாறுகளை சுருக்கி வடித்து கொடுத்துதவியவர் இப்னு திஹ்யா என்பவர். இதற்காக ஆயிரம் பொற்காசுகளை இவருக்கு மன்னர் சன்மானம்

வழங்கினார். இது சுன்னத்துதான் என்பதற்கு ஹாபிழ் இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் பல ஆதாரம் காட்டியுள்ளார்கள். ஹாபிழ் ஜலாலுத்தீன் சுயூதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும் இவ்வாறான ஆதாரம் காட்டி 'இது பித்அத்துன் மத்மூம்'-பழிக்கப்பட்ட நூதன அனுஷ்டானம் என்று கூறிடுவோருக்கு நல்ல வாயாப்பும் கொடுத்திருக்கிறார்கள் என்று இமாம் இப்னு ஜவ்ஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியுள்ளார்கள்.

(தப்ஸீர் றூஹுல் பயான் வால்யூம் 26 பத்ஹு அத்தியாயம்)

'இஸ்லாமியர்கள் ஒவ்வொரு ஆண்டும் மீலாது ஷரீப் கொண்டாடிக் கொண்டும், முக்கியத்துவமிக்கதாக புனித மௌலிது ஓதிக் கொண்டுமே வாழையடி வாழையாக வந்துள்ளார்கள். இதனால் பெரும் வருசை அவர்கள் மீது வெளியாகி கொண்டுமிருந்தது' என்று முல்லா அலீ கரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மவ்ரிதுல் ரவிய்யி எனும் கிரந்த முன்னுரையில் தீட்டியும், '(ரபியுல் அவ்வலான) இம்மாத்திற்கு இஸ்லாத்தில் தனி மகிமை உண்டு. எல்லா மாதங்களை காணவும் தனிச் சிறப்பு இருக்கிறது. வசந்தத்தில் வசந்தம் ஜோதிக்கு மேல் ஜோதி' என்ற இசையை பாடியுமுள்ளார்கள்.

மேற்கண்ட ஆதாரங்கள் அனைத்திலும் மூன்று சாராம்சங்களை காண முடிகின்றது.

1. மேற்கத்திய, கிழக்கத்திய நாட்டு முஸ்லிம்கள் இதை நல்ல காரியமாக நினைத்து நடத்தி வருகின்றனர்.

2. இமாம் ஜலாலுத்தீன் சுயூதி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இப்னு ஹஜர் ஹைத்தமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் சகாவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் இப்னு ஜவ்ஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் ஹாபிழ் இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி போன்ற தலைசிறந்த பெரும் இமாம்கள் இதை நன்மையென கருதி அனுமதித்துள்ளார்கள்.

3. வருடம் முழுவதும் மீலாது ஷரீபின் பரக்கத் நிரம்பி இருப்பதாகவும், வீட்டில் நிம்மதியான வாழ்வுக்கு வகை புரிவதாகவும் நாட்டம் தேட்டம் நிறைவேற்றப்ப:டுவதாகவும் தெரிய வருகின்றது.

அறிவுத் துறையில் முன்னோக்கினாலும் மீலாது ஷரீப் கொண்டாட்டத்தில் பல பிரயோஜனங்கள் இருக்கின்றன. அவையாவன:

1. பெருமான் நபியின் பெருமைகளை கேட்குமிடத்து அன்பு, பாசம் வளர்ந்தோங்குகிறது.

பெருமானாரின் அன்பு பாசம் வளர அவர்கள் மீது ஸலவாத்து ஓதி வர வேண்டும். அன்னாரது வாழ்க்கை சரிதைகளை பார்த்துணர வேண்டும் என்று

ஷெய்கு அப்துல் ஹக் முஹத்திது திஹ்லவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களும், ஏனைய ஸூபிய்யாக்களும் நவின்றுள்ளனர்.

படிக்கத் தெரிந்தவர்களுக்கு நூற்களை நோக்கி அன்பை வளர்த்துக் கொள்ள முடியும். பாமர மக்கள் இவைபோன்ற விழாக்களில் கேட்டுணர்ந்துதானே அன்பை வளர்க்க முடியும். இதற்கு மீலாது விழா வாய்ப்பளிப்பதாக அமைகின்றது.

2. பிற மதத்தினர்கள் இவ்விழாவில் கலந்திருந்தால் அவர்கட்கு நமது இஸ்லாமிய கோட்பாடு தத்துவங்களையும், சிறப்பியல்புகளையும் எடுத்துக் கூறிடவும் ஏதுவாகின்றது. இறையோனின் இன்னருள் இருந்தால் இவ்விழாவினால் அவர்கள் இஸ்லாத்தை தழுவிடவும் இடம்பாடுண்டு.

3. இஸ்லாமியர்கட்கு கூட தீனிய்யான மஸாயில்களை எடுத்து விளக்கிட இவ்விழா வழிவகுக்கின்றது.

வெள்ளிக் கிழமை ஜும்ஆவிற்கு கூட வராத பட்டிக்காட்டு மக்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை தீனிய்யான மஸாயில்களை கற்றுத் தருகின்றோம் என்று அழைத்தால் வருவார்களா? வரமாட்டார்கள். ஆனால்,...

பெருமானாரின் மீலாது ஷரீப்-உதயதினவிழா என்றதும் ஆனந்தப் பெருக்குடன் அங்கு ஆஜராகின்றார்கள். இதை நான் பல்வேறு இடங்களில் அனுபவமாக கண்டிருக்கிறேன். இதுபோது அவர்கட்கு தீனிய்யான மஸாயில்களை கற்றுக் கொடுக்கவும், அவர்களை சீர்படுத்தவும் இவ்விழா உதவுகின்றது.

4. தீனிய்யான மஸாயில்களையும், நேர்வழி காட்டக் கூடிய கருத்து கருவூலங்களையும்(முடிந்த அளவு) கவிகளாக வடித்து கூற வேண்டும். வசனத்தை விட கவிதைகள் உள்ளத்தில் அதிக குணபாட்டை உண்டாக்குகின்றன. மிக எளிதில் மனனத்திற்கும் வருகின்றன.

5. இப்புனித மீலாது மஜ்லிஸில் பெருமானாரின் நஸபு-வம்சாவழி, அவர்களது மனைவி, மக்கள், அவர்கள் பிறப்பு வளர்பருவம்,வாலிபம் போன்ற முக்கிய வரலாறுகள் நினைவுக்கு வருகின்றது.

மிர்ஸாயி, ராபிழி போன்ற கெட்ட கொள்கையுடையோர்கள் தங்கள் கெட்ட கொள்கை கோட்பாடுகளை முழுக்க முழுக்க தெரிந்து ஞாபகத்தில் இருத்தி வைத்திருக்கிறார்கள்.

சத்தியக் கொள்கையுடையவர்களான நாம் நமது கொள்கை கோட்பாடுகளை மனதில் இருத்தி வைப்பதில்லை.

ராபிழி கூட்டத்தார்களின் இளம் சிறார்கள் கூட பன்னிரெண்டு இமாம்களின் பெயர்கள், குலபாயே ராஷிதீன்களின் நாமங்களை வரிசைக்கிரமமாக ஞாபகத்தில் வைத்திருக்கிறார்கள். ஆனால்,...

சுன்னத் வல் ஜமாஅத்தார்களான நமது பிள்ளைகளிடம் அல்லது வயோதிகர்களிடம் பெருமானாருக்குப் பிள்ளைகள் எத்தனை? மருமக்கள் எத்தனை? என வினவினால் விடை பகர தயங்குகிறார்கள். இப்படிப்பட்ட பரீட்சையை பல வயோதிகர்களிடம் பார்த்திருக்கிறேன்.

மீலாது விழாக்களில் இவ்விஷயங்களைப் பற்றி பேசும்போது ஞாபகத்தில் வைத்துக் கொள்ள உதவியாகின்றது.

இவ்வாறு நல்ல நோக்கங்களோடு அமைக்கப்பட்டதை அழிக்க முனையாதீர்கள். இவ்வாறாக மேலும் அமைத்திட முயற்சி செய்யுங்கள்.

மீலாது ஷரீப் கொண்டாடுவது ஷிர்க், மீலாது விழா குப்ருடைய விழா என்று கூறிவரும் கும்பல்கள் தங்கள் குரு என்றும், பீர் என்றும் போற்றி வருகின்ற ஹாஜி இம்தாதுல்லாஹ் முஹாஜிரி மக்கி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்,....

'மீலாது ஷரீபில் பரக்கத்துக்களை பெற வேண்டுமென்ற காரணத்தாலும் அதில் (பிறப்புச் செய்தி வரும்போது) நிலை நிற்பதினால் அன்பு, இன்பத்தைப் பெறுகின்ற காரணத்தாலும் ஒவ்வொரு ஆண்டும் இதை நான் செய்து வருகிறேன்' என தங்களது 'பைஸலயே ஹப்த் மஸ்அலா' எனும் நூல் 7-ம் பக்கத்தில் கூறுகின்றார்கள்.

குரு-பீர் அவர்கள் ஆகுமானது பரக்கத் உண்டு என்று சொல்லியும் செய்தும் இருக்கிறார்கள். அவர்களது சிஷ்யர்கள் என்று கூறுபவர்கள், அது ஆகாது, ஷிர்கு, குப்று என்று சொல்லித் திரிவது மிக ஆச்சரியம்தான். உண்மையாக குருவாக ஏற்றிருந்தால் இப்படி முரண் ஏற்படுமா? என்னே! குருவை எங்ஙனம் பின்பற்றியவர்களாக இவர்கள் ஆக முடியும்?

மார்க்க வல்லுனர்களான புகஹாக்களிடத்தில், 'மக்ரூஹ் தன்ஸீஹ் என்று சொல்வதற்குக் கூட ஆதாரம் தேவை. ஆதாரமின்றி மக்ரூஹ் தன்ஸீஹ் கூட தரிபடாது' என்று உரூஸ்-கந்தூரி சம்பந்தமாக வரையுமிடத்தில் சுட்டிக் காட்டியுள்ளோம்.

அப்படியானால் ஒரு காரியத்தை ஹராம் (ஷிர்கு-குப்று) என்று கூறுவது எளிதானதில்லை.

ஆனால்,...

'முஸ்தஹப்பு' என்'று சொல்வதற்கு முஸ்லிம் ஜனங்கள் அதை நல்லதாக கூறுகின்றார்கள். தவாபை நாடி செய்கின்றார்கள். மார்க்கத்தில் அதற்கு தடையில்லை என்றிருந்தால் மட்டும் போதுமானது.

இதற்கான பல ஆதாரங்களை 'பித்அத்' சம்பந்தமாக பேசுமிடத்தில் சொல்லியிருக்கிறோம்.

ஆகவே இப்புனிதமான மீலாது விழாக் கொண்டாட்டத்தை முஸ்லிம் ஜனங்கள் நல்லதாக கருதி செய்து வருகின்றனர். மார்க்கத்தாலும் எவ்வித தடையுமில்லை. எனவே இது முஸ்தஹப்பு என்பதில் சந்தேகமில்லை.

'பித்அத், ஹராம், ஷிர்கு' என்று வாயால் புலம்பினால் போதாது. சட்டப்பூர்வமான ஆதாரங்களை, ஆயத், ஹதீதுகளை வெளிக் கொணர வேண்டும். வெத்துப் புலம்பல் உதவாக்கரை காரியம் நடவாது.

## இரண்டாம் பாடம்

### மீலாது ஷரீப் கொண்டாடுவதன் மீது எழும் ஆட்சேபணைகளும், அதற்கான தக்க பதில்களும்:-

குதர்க்கவாதிகள் கீழ்க்கண்ட வினாக்களை தொடுக்கின்றனர். அதற்கான தக்கபதில்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வினா:-** மீலாது ஷரீப் பித்அத்தாகும். காரணம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்திலோ, தாபியீன்கள் காலத்திலோ நடை பெறவில்லை. எல்லா பித்அத்துகளும் ஹராமாகும். எனவே மௌலிது மஜ்லிஸும், மீலாது ஷரீபும் ஹராமாகும்.

**விடை:-** மீலாது ஷரீப் 'பித்அத்' என்று செல்வது அறிவீனம். அசல் மீலாது ஷரீப் சுன்னத்தே இலாஹி- இறைவனின் வழிமுறை என்றும் சுன்னத்தே அன்பியா-நபிமார்களின் வழிமுறை எனள்றும், அமரரர்களின் வழிமுறை என்றும், முஸ்லிம் பொது ஜனங்களின் செயல் முறைகள் என்றும் நாம் முதல் பாடத்தில் விமர்சித்து சொல்லியிருக்கிறோம். ஆனதினால் எப்படி பித்அத்தாகும்?

பித்அத் என்று வைத்துக் கொண்டாலும் எல்லா பித்அத்துகளும் ஹராமாகி விடாது.

பித்அத்துகளில் சில வாஜிபு என்றும், முஸ்தஹப்பு என்றும், ஜாயிஸ் என்றும், ஹராம் என்றும், மக்ரூஹ் என்றும் பலவகை இருக்கின்றன என்று 'பித்அத்' சம்பந்தமான பாடத்தில் தெளிவாகவே வரைந்துள்ளோம். மேலும்...,

தப்ஸீர் ரூஹுல் பயான் நூலை மேற்கோள் காட்டி மீலாது ஷரீப் பித்துன் ஹஸனா-நல்லனுஷ்டானம் என்றும், விரும்பத் தகுந்த முஸ்தஹப்பு என்றும், இதன் முதல் பாடத்தில் காட்டியுள்ளோம். பெருமானாரின் புகழை கூறுவது எங்ஙனம் ஹராமாகும்?

**வினா:-** மீலாது சபையில் ஹராமான காரியங்கள் அநேகம் நடைபெறுகின்றன. ஆண், பெண்கள் கலந்திருக்கிறார்கள். தாடி சிரைத்தவர்கள் புகழ் பாடுகிறார்கள். ஆதாரமற்ற வரலாறுகளையும், கட்டுக்கதைகளையும்

கூறுகின்றனர். எனவே இச்சபை ஹராம்களை சேகரமாக்கிக் கொள்கின்றது. இதனால் மீலாது ஷரீபு ஹராமாகும்.

**விடை:-** மேற்கண்ட ஹராம்கள் எல்லா மீலாது ஷரீபுகளிலும் நடைபெறுவதில்லை. பெரும்பாலும் இல்லை. பெண்கள் தங்களுக்குரிய மறைவிடங்களில் தனியாகவே இருக்கின்றனர். ஆண்களுடன் கலந்திருப்பதில்லை. புகழ்பாடுபவர்கள் எத்தனையோ பேர்கள் மார்க்கப்பற்றுள்ளவர்களாக இருக்கிறார்கள். வரலாறுகளும் ஆதாரமிக்கவைகளாக இருக்கின்றன. படிப்பவர்கள் அதபு ஒழுக்கத்தோடும், உளுவோடும் மிக பயபக்தியோடும் இருப்பதை நாம் கண்ணால் கண்டிருக்கிறோம். பெருமானாரின் புகழ் பாடப்படுகின்றது. மறுபுறம் அன்பர்களின் கண்கள் ஆனந்தப் பெருக்கால் கண்ணீரை சிந்துகின்றன. பெருமானாரின் மீது கொண்டுள்ள பேரன்பின் போதை கொண்டவர்களாக ஆடுவதை பார்க்கின்றோம். இப்பேரானந்தத்தை எங்ஙனம் தடுக்க இயலும்?

ஏதாவதொரு மீலாது ஷரீபில் ஹராமான காரியங்கள் நிகழ்வுறுவதால் மீலாது ஷரீபே கூடாது- ஹராம் என்று முடிவுக்கு வந்து தடுத்து நிறுத்துவது மதியீனம். ஹராம்களை தடுத்து நிறுத்துங்கள். பெருமானாரின் புகழை பாடுங்கள். ஆனந்தக் களிப்படையுங்கள்.

நன்மையான சுன்னத்தான காரியங்களில் ஹராமானவைகள் சேர்வதால் அசல் சுன்னத்தோ, ஜாயிஸானதோ ஹராம் என்று மாறி விடாது என்று உரூஸ் சம்பந்தமான பிரச்சனையின்போது விளக்கிச் சொல்லியிருக்கிறோம்.

அப்படியே ஹராம் என்று ஆகிவிடுமென்றிருந்தால் முதன்மையாக மார்க்க கல்வி கலாசாலைகளை மூட வேண்டும். அங்கே வாலிபர்களும், அவரது அழகான சிறுவர்களும் இரண்டறக் கலந்து கல்வி கற்கின்றனர். தவறான காரியங்கள் எத்தனையோ நடந்ததாகக் கேள்வியுறுகிறோம்.

இன்னும் கல்வி ஸ்தாபனங்களில் திர்மதி, புஹாரி, இப்னு மாஜா போன்ற ஹதீது நூல்களையும், தப்ஸீர் நூல்களையும் மற்றும் இதர நூல்களையும் படிக்கின்றனர். அவை அனைத்திலும் சான்றுள்ள ஆதார வலுமிக்கவைகள் தான் பொதிந்திருக்கின்றன என்று சொல்வதற்கில்லை. சல பலகீனமான ஹதீதுகளும், சில கட்டுக்கதையான வரலாறுகளும் கூட இடம் பெற்றிருக்கின்றன. சில மாணவர்கள் அல்ல சில ஆசிரியர்களும் கூட தாடியை சிரைத்தும் இருக்கிறார்கள். எனவே கல்வி கலாசாலைகளை மூடி விட வேண்டுமா என்ன? மூட வேண்டியதில்லை. தவறுகளை ஹராம்களை தடுத்து நிறுத்துங்கள். மார்க்க கல்வி வளர்ந்தோங்க பாடுபடுங்கள். ஹராம்கள் சேர்ந்திருப்பதால் அசல் கல்வியை தடுத்து கல்வி கூடங்களை மூடுவது நியதியன்று.

அதுபோன்றே மீலாது ஷரீபை கொண்டாடுங்கள். ஹராம்களை தூரமாக்குங்கள்.

தாடியை சிரைத்தவர்கள் குர்ஆன் ஓதலாமா? ஓதினால் தடுக்கலாமா? இல்லையே! அப்படியானால் மீலாது ஷரீப் கொண்டாடினால் மௌலிது ஷரீப்

ஓதினால் மட்டும் தடுக்கின்றீர்களே ஏன்? பெருமானாரின் மீது வெறுப்பா? தீமையை தடுங்கள். நன்மையை எடுங்கள்.

**வினா:** மீலாது ஷரீபின் காரணமாக வெகுநேரம் இரவு விழித்திருக்கிறார்கள். அதன்பின் நித்திரை கொள்வதால் ஸுப்ஹுத் தொழுகை 'களா'வாகி விடுகிறது. பர்ளுத் தொழுகைக்கு இடையூறு வருவதால் மீலாது ஷரீபு ஹறாமாகும்.

**விடை:-** மீலாது ஷரீபு எப்பொழுதும் இரவில் நடப்பதில்லை. பகலில்தான் அனேகமாக நடைபெறுகிறது. இரவில் நடந்தாலும் வெகுநேரம் நடப்பதில்லை. 10, 11 மணிக்குள் முடிவடைந்து விடுகின்றது. இதர காலங்களில் இந்த அளவு சாரதாரணமாக மக்கள் விழிக்கின்றார்கள். வெகுநேரம் விழிப்பவர்கள் என்று வைத்துக் கொண்டாலும் கூட ஜமாஅத்தில் பேணுதலுடையவர்கள் முன்னதாகவே விழித்தெழுந்து ஸுப்ஹுத் தொழுகைக்கு ஆஜராகுவதைக் காணுகிறோம்.

எனவே இக்கேள்வி மீலாது ஷரீபைத் தடுப்பதற்கான சதியாகும். அப்படியானால் மார்க்கக் கல்வி ஸ்தாபனங்களின் வருடாந்திர விழாக்கள், சமுதாய சீர்திருத்த கூட்டங்கள், திருமண வைபவங்கள் போன்றவை இரவு நேரங்களில் வெகுநேரம் வரை நடைபெறுகின்றன. அதுபோல இராக் காலங்களில் இரயில் பிரயாணம் செய்கிறபோது வெகுநேரம் விழிக்கின்றமையால் சிலருக்கு ஸுபுஹு தொழுகை 'களா' வாகி விடுகின்றது.

இதனால் வருடாந்திர விழாக்கள், சமூக நலக் கூட்டங்கள், திருமண விழாக்கள், இரயில் பயணம் போன்றவை 'ஹராம்' எனக் கூறிவிடத் துணிவீர்களா? இவை 'ஹலால்' என்றிருக்கம்போது 'மீலாது ஷரீபு மட்டும்' 'ஹராமா'கி விட என்ன காரணம்?

இப்படி ஹராம் எனக் கூறுவது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கொண்ட வெறுப்புணர்வே காரணமாகும்.

**வினா:-** மீலாது ஷரீப் எல்லாவற்றையும் விட கெட்டது என அல்லாமா ஷாமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் 'ரத்துல் முஹ்தாரி'ல் கூறியுள்ளார்கள். தப்ஸீர் அஹ்மதிய்யாவிலும் மீலாது ஷரீப் ஹராமென்றும் அதை ஆகுமென்பவன் காபிரென்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே மீலாது ஷரீப் மிகக் கெட்ட செயலாகும்.

**விடை:-** அல்லாமா ஷாமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் (நாம் கூறிவருகிற) மீலாது ஷரீபை ஹராமென்று சொல்லவில்லை. சிலர்கள் பாட்டுக் கச்சேரிகள், பஜனைகள், வீண் கேளிக்கைகளை மீலாது ஷரீப் எனக் கூறியும், இவைகள் நன்மையான காரியம் என்று கருதியும் செய்து வருகின்றனர். இதைத்தான் அல்லாமா ஷாமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வன்மையாக கண்டித்துள்ளார்கள். இக் கருத்தைத்தான் அவர்கள் வாக்கியம் அறிவிக்கின்றது.

தப்ஸீர் அஹ்மதிய்யாவிலும் இப்படிப்பட்ட பாட்டுக் கச்சேரிகள், வீண் விளையாட்டுக்களை செய்வதையும் அதில் குடித்துவிட்டு கூத்தாடுவதையும், இதை கேட்பதை நன்மையான காரியம் என்று நினைப்பதையும் தான் தடுத்துள்ளார்கள். இக்கருத்தை மிகத் தெளிவாக 31:6-ம் வசன விளக்கவுரையில் விபரித்துள்ளார்கள்.

புனித மீலாது ஷரீபில் வீண் காரியங்கள் எதுவும் இருக்கக் கூடாது நிகழவும் விடக் கூடாது என்று மேலே விளக்கமாக கூறி வந்துள்ளோம்.

இசைக்கருவிகளை வைத்து புகழ் பாடுவதை மீலாது ஷரீப் என்று கூறியும், செய்தும் வந்ததை நான் கராச்சி சென்றபோது அங்கு நேரில் கண்டேன்.

இதைபோன்று பதாயூன் ஊருக்கு பக்கத்து ஊரில் ஒருவன் மரணமான தன் தந்தைக்கு கத்தம் பாத்திஹா ஓத ஏற்பாடு செய்து ஸூரத்தே யாஸீன் பதிவாகிய ரிகார்டை ஈஸால் தவாப் செய்யும் கோலத்தையும் கண்டேன்.

இப்படிப்பட்ட வீண்தனமான காரியங்களை எவர்தான் ஆகுமாக்கி வைப்பார்? புனித மீலாது ஷரீபிலும் இவை போன்ற வீண் காரியங்கள் இடம் பெறுகின்றவைகளை மேற்கண்ட பெரியோர்கள் தங்களது காலத்திலும் கண்டார்கள். அதைத்தான் தடுத்தார்கள். நாம் கூறிவரும் விரும்பத் தகுந்த மீலாது ஷரீபை அன்று. பொதுப்படையாக மீலாது ஷரீபு ஆகும் என்று நம்புவது குப்று-ஷிர்கு என்றிருக்குமானால் (தப்லீக் ஜமாஅத்தார்கள் கூட போற்றி வருகின்ற) ஹாஜி இம்தாதுல்லாஹ் மக்கி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் குப்று-ஷிர்க்கை விட்டும் தப்ப முடியாது. ஏன் அவர்கள் மீலாது ஷரீபை ஆகுமென்று தீர்ப்பு வழங்கியும், செயல்படுத்தியுமுள்ளார்களே!

**வினா:-** ஐபெருமான் நபியின் புகழை) புகழ் பாடுதல் ஹராமாகும். இதுவும் இசை, இராகம் வகையைச் சார்ந்ததாகும். இசை, இராகங்கள் ஆகாதவை, கெட்டவை என ஹதீதுகள் வந்துள்ளன. இதுபோன்று அவ்விழாக்களில் சீரணி-தபர்ருக் வழங்கப்படுவதும் இஸ்ராப்-வீண் விரயமாகும்.

**விடை:** புகழ் பாடுதல், புனித புகழை எடுத்துச் சொல்வது மிகச் சிறந்த வணக்கமாகும்.

திருக்குர்ஆன் முழுவதுமே பெருமானாரின் பெருமைகளை, சிறப்பியல்புகளை எடுத்தோதுவதாகவே இருக்கின்றது. இதை ஆதாரப்பூர்வமாக விளங்க விரும்பினால் எமது ‘ஷ.்.னே ஹபீபுர் ரஹ்மான்’ நூலை நாடுக!

முந்தைய நபிமார்கள் அனைத்து பேரும் பெருமானாரின் புகழை எடுத்தோதியே வந்துள்ளார்கள்.

கண்ணியமிக்க நபித்தோழர்களும், ஏனைய முஸ்லிம் பெருங்குடி மக்களும், பெருமானாரின் திருப்புகழை நன்மை பயக்கும் காரியமாகவே மதித்து வந்துள்ளார்கள்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் தங்கள் புகழை பாட வைத்து கேட்டு களிப்படைந்து சன்மானங்கள் வழங்கி ஆசீர்வதித்துள்ளார்கள்.

எடுத்துக்காட்டாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், ஹஸ்ஸான் ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கட்கு பள்ளியினுள் மிம்பர்-மேடை அமைத்துக் கொடுப்பர்கள். அதன்மேல் நின்று கொண்டு (அவைப்புலவர்) ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பெருமான் நபியின் புகழைப் பாடுவார்கள். கயவர்கள் பெருமான் நபியை தூஷித்துப் பாடிய பாடல்களுக்கு மறுப்புப் பாடல்களையும் அள்ளி வீசுவார்கள்.

'ரூஹுல் குத்ஸை கொண்டு ஹஸ்ஸானுக்கு இறைவன் உறுதுணையளிப்பானாக' என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துஆ செய்து கொண்டிருப்பார்கள் என்று அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகின்றார்கள்.

(நூல்: மிஷ்காத் பக்கம் 410)

ஆகவே பெருமானாரின் புகழ் பாடுதல் வணக்கங்களில் உயர் வணக்கமாகும். எனவேதான் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கட்கு அதுவும் பள்ளியினுள் மேடை அமைத்துக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார்கள்.

அல்லாமா பூஸரி ரஹிமஹுல்லாஹ்' அவர்கட்கு பக்கவாதம் கண்டு உயர்தர சிகிச்சைகள் அளித்து ம் பலன் கிடைக்காமல் போக, மனமுருகி புருதா ஷரீபு பாமாலைகளை பெருமான் நபி மீது பாடி காணிக்கையாக்கினார்கள்.

அன்றிரவே பெருமானார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கனவில் தோன்றி பாமாலைகளை படிக்கச் செய்து தங்களது மேலங்கியை பரிசாக வழங்கினார்கள். அதனால் பக்கவாதப் பிணியும் பூரணமாக சுகமானது. (ஷரஹு புர்தா ஷரீபு)

ஆகவே பெருமானாரின்புகழ் பாடல்கள் இம்மை மறுமை பேற்றினை நல்குகின்றது. பெரும் மேதைகளான அல்லாமா ஜாமி ரஹிமஹுல்லாஹ் அபூ ஹனீபா ரஹிமஹுல்லாஹ், ளெதுல் அ∴ழம் ரலஹிமஹுல்லாஹ் ஏனை இறைநேசச் செல்வர்கள் புகழ்மாலைகளை யாத்துள்ளார்கள். அவைகள் இன்றளவும் பிரபல்யம் அடைந்து பாடப்பட்டு வருகின்றன. தீய கருத்துக்கள் அடங்கிய காம உணர்ச்சியை தூண்டிவிடும் கவிதைகளை பற்றிதான் தடைகள் ஹதீதுகளிலும், பிக்ஹு கிரந்தங்களிலும் வந்துள்ளன. பெருமானாரின் புகழ்பாடல்கள் குறித்து அல்ல.

இதைப் பூரணமாக விளங்க நாடினால் 'மிஷ்காத் ஷரஹு மிர்காத்' நூலைப் புரட்டிப் பாருங்கள்.

இலக்கண இலக்கிய நயத்திற்காக பாடல்களை அதுவும் தீய கருத்துக்களுடையதாகயிருந்தாலும் அவைகளை கற்றுக் கொள்வது ‘பர்ளு கிபாயாவாகும்’ என்று புகஹாக்கள் வரைந்துள்ளார்கள்.

‘தீவானே முதநப்பி’ போன்ற தீய கருத்துக்கள் அடங்கிய இலக்கிய நூற்கள், இஸ்லாமிய அரபிக் கல்லூரி பாடத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இலக்கியத்தையும், வார்த்தைகளையும் கற்றுக் கொள்வதற்காகவே அன்றி வேறில்லை. எனவே கருத்துக்கள் தீயவைகளாக இருப்பதால் சொற்களின் தூய்மை இழந்து போகுவதில்லை.

‘அஞ்ஞான காலத்து பாடல்களை அறிந்து கொள்வது புபஹாக்களிடம் பர்ளு கிபாயாவாகும். காரணம் அதனால் அரபியர்களின் வசன, கவி நடைகளையும், அரபு இலக்கண இலக்கியத்தையும் நன்கு புரிந்து கொள்ள முடியும். இப்பாமாலைகளை தழுவியேதான் அரபு இலக்கண, இலக்கியம் இருக்கின்றது. கருத்துக்களில் தவறுகள் இருப்பினும் வார்த்தைகளில் தவறு வருவதில்லை’. (ஆதாரம்: ரத்துல் முக்தார்)

கவிதைகள், இன்னிசைகள் பற்றிய வார்த்தைகளில் ஆதாரப்பூர்வமான உரூஸ்-கந்தூரி பற்றி நாம் பேசும்போது வரைவோம். இன்ஷாஅல்லாஹ்.

சீரனி-தபர்ரூக் பங்கீடு செய்வதும் மிக நல்ல காரியம்தான், குதூகலமான போது (அதை வெளிப்படுத்துவான் வேண்டி) உணவு பொருட்களை மக்களுக்கு வழங்கி வர வேண்டியதை திவ்விய ஹதீதுகள் பறைசாற்றுகின்றன.

குழந்தை பிறந்ததற்காக அகீகா-ஆடு அறுத்து தானம் செய்வதும், மணம் முடித்துக் கொண்டதும் வலீமா விருந்து கொடுப்பதும் சுன்னத்தாகும்.

மகிழ்ச்சிப் பெருக்கை வெளிக்காட்டுவதன்றி வேறு என்ன இது?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருமண வைபவத்தின் போது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி தம் தோழர்களுக்கு ஆகாரங்களை வழங்கி வந்திருக்கிறார்கள்.

ஆகவே முஸ்லிம் பெருமக்கள் பெருமானாரின் பேரன்புப் பெருக்கால் மீலாது ஷரீப் பொண்டாடுகின்றனர். தான தர்மங்கள் செய்கின்றனர். சீரணி வழங்குகின்றனர். இதில் தவறில்லை. வீண் விரயமில்லை. இதுபோன்றே தீனிய்யத்தான நூற்களை ஆசிரியப் பெருந்தகைகளிடம் துவக்கம் செய்யும் பொழுதும் மாணவர்கள் சீரணி வழங்குகிறார்கள்.

இவ்வுயரிய வழக்கம் சான்றோர்கள் காலம் முதல் இன்றளவும் இருந்து வருகின்றது.

நான் மேண்டூரில் சொஞ்ச காலம் கல்வி கற்று வந்தேன். நான் கற்ற அந்த பாடசாலை தேவுபந்துகாரர்களால் நிறுவப்பட்டது. அப் பாடசாலையிலும் கூட

கல்வி நூற்களை துவக்கம் செய்யும் பொழுதும், நிறைவு படுத்தும் பொழுதும் சீரணி வழங்கப்படுகின்றது.

ஆகவே தீனிய்யத்தான காரியங்களை துவக்கம் செய்யும் பொழுதும், நிறைவு செய்யும் பொழுதும் சீரணி பகர்ந்து கொள்வது சான்றோர்களின் நன்னெறியாகும்.

தீனிய்யான காரியங்களில் முக்கிய இடத்தை மீலாது ஷரீப் பெற்றிருப்பதால் அதில் சீரணி வழங்கி மகிழ்வது நன்மையை பயனளிக்கும்.

இதை குர்ஆன் ஹதீதுகளிலிருந்தும் கிரகித்து எடுக்கலாம்.

يَاأَيُّهَاالَّذِيْنَ آمَنُوْا إِذَانَاجَيْتُمُ الرَّسُوْلَ فَقَدِّمُوْابَيْنَ

يَدَىْ نَجْوَاكُمْ صَدَقَةً ذَالِكَ خَيْرٌلَّكُمْ وَاَطْهَرُ

*‘ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் சம்பாஷணை செய்வதாகயிருந்தால் உங்கள் சம்பாஷணைக்கு முன் சில வெகுமதிகளை முற்படுத்துங்கள். அதுவே உங்களுக்கு சாலச் சிறந்தது. (உங்கள் பாவங்களை) பரிசுத்தமாக்க வல்லது.’* (அல்-குர்ஆன் 58:12)

முக்கியமான காரியங்கள் குறித்து நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் உரையாடுவதாக இருந்தால் சீமான்கள் சில வெகுமதிகளை முன் வைத்து பேச வேண்டுமென ஆரம்பகால சட்டமிருந்தது. (நயவஞ்சகருள் சிலர் தேவையற்ற விவாதங்கள் மூலம் பெருமானாருக்குத் தொல்லைகள் தந்தபோது அமுலாக்கப்பட்ட இச்சட்டம் தொல்லைகள் நீங்கிய போது தளர்த்தப்பட்டது.)

என்னிடம் ஒரு பொற்காசிருந்தது. அதை பத்து வெள்ளி காசுகளாக மாற்றி ஒவ்வொரு காசாக பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன் வைத்து பத்து சட்டங்களை தெரிந்து கொண்டேன் என அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள்.

பின்னர் இச்சட்டம் மாற்றலாகி விட்டது என்றாலும் பெரியார்களைச் சந்திக்கும் போது வெகுமதிகளை வழங்குதல் ஆகுமென்ற சட்டம் இருந்தே வரும்.

எனவே அவ்லியாக்களின் தர்பார்களுக்குச் செல்கிற போதும், குர்ஆன், ஹதீது மற்றும் தீனிய்யத்தான நூற்களை ஆரம்பிக்கும் போதும் சீரணிகளைக் கொண்டு செல்வதும், தான தர்மங்கள் வழங்குவதும் சிறப்புடையனவாகும்.

இதைப்போன்றே மீலாது ஷரீப் வைபவங்களுக்கு முன்னும் பின்னும் தான தருமங்கள் செய்வதுவும் சாலச் சிறந்த நன்மையை தரத்தக்க நற்செயலாகும்.

ஹஜ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு சூரத்துல் பகராவின் தத்துவார்த்தங்களை பன்னிரண்டு ஆண்டுகள் பெருமானாரிடம் கற்றுணர்ந்தார்கள். கற்று முடிந்த தினமன்று ஒட்டகையொன்று அறுத்து நபித் தோழர்களுக்கு விருந்து படைத்தார்கள்.

(அறிவிப்பாளர்: இப்னு உமர், நூல்: பைஹகி, தப்ஸீர் பத்ஹுல் அஜீஸ், பக்கம் 86)

முக்கியமான காரியங்கள் நிறைவு செய்யும்போது உணவு வகைகள் பங்கீடு செய்ய வேண்டுமென்பதை மேற்காணும் ஹதீது உறுதி செய்கிறது. மார்க்கத்தின் முக்கியமான இடத்தை மீலாது ஷரீப் வகிப்பதால் அதில் உணவுப் பொருட்கள் வினியோகிப்பது நன்மையன்றோ?

تَهَادَوْا تَحَابُّوْا

'குடும்பத்தினர்களை சந்திக்கச் சென்றால் ஏதாவது கொண்டு செல். அதனால் அன்பை வளர்த்துக் கொள்.' இது ஒரு முதுமொழி.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சமூகம் (மதினா) சென்றால் அங்குள்ள ஏழை மக்களுக்கு தர்மம் செய்யுங்கள். அவர்கள் பெருமானாரின் அண்டை வீட்டாராக இருக்கின்றனர் என புகஹாக்கள்-மார்க்க மேதைகள் வரைந்துள்ளார்கள்.

இதே முறையில்தான் மி.ஃ.ராஜின் போதும் 'எனக்கு என்ன பரிசுகளை கொண்டு வந்தீர்' என்று அல்லாஹ் ரஸூலுல்லாஹ்விடம் கேட்டான்.

***எனவே இப்படி தபர்ருக் வழங்குவது வீணான இஸ்ரா.ஃப் ஆன காரியமல்ல! வீணானவை என்பது முட்டாள்தனம்.***

ஒட்டகையறுத்து பெரும் விருந்து கொடுத்த உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம்,....

لَاخَيْرَ فِي السَّرْفِ

*'லா கைர-.ஃபிஸ' ஸர்.ஃப்' வீண் விரயத்தில் நன்மையில்லை!* என்று யாராவது சொல்லி இருந்தால்,....

لَاسَرْفَ فِي الْخَيْرِ

*'லா ஸர்.ஃப.ஃ. பில் கைர்' நன்மையில் விரயமில்லை!* என்று சொல்லி இருப்பார்கள்.

**வினா:-** மீலாது ஷரீபிற்கு பிறரை அழைப்பது ஹராம். நபில் தொழுகைக்காக ஜனங்களை அழைத்து தொழவைப்பது தடுக்கப்பட்டுள்ள போது தொழுகையை விட மீலாது ஷரீப் மேலானதா?

**விடை:** நல்லுபதேச வைபவங்களுக்கும், திருமணம், வலீமா, அகீகா போன்ற வைபவங்களுக்கும் மக்கள் அழைக்கப்படுவதை ஹராம் என்கிறீர்களா? இல்லை ஹலால் என்று சொல்கிறீர்களா?

திருமணம், நல்லுபதேச கூட்டங்கள் போன்றவை இஸ்லாமியக் கடமைகள். எனவே இவற்றுக்கு மக்களை அழைக்கலாம் என்று முன் மொழிவீர்களானால்,

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது கண்ணியமும், மரியாதையும் செலுத்துவதும் மிக மிக முக்கியமான கடமையன்றோ? எனவே அதற்காக மக்களை அழைப்பது ஹலால் ஆகாதா? என்று நாங்களும் கேள்விக்கணை தொடுப்போம்.

தொழுகையல்லாதவற்றை தொழுகையின் மீது 'கியாஸ்' ஒழுங்கு பிடிப்பது மடமை! 'ஒளு' இன்றி தொழக் கூடாது. எனவே ஒளு இன்றி குர்ஆன் ஓதவும் கூடாது என்று சொல்ல முன் வருவார்களா?

இப்படியொருவர் கூறினால் அவரைவிட மடமை குடிகொண்ட மற்றொருவர் இருக்க முடியாது. (இதைப் போன்றே மீலாது ஷரீபை தொழுகையோடு ஒழுங்குப் படுத்திக் கூறுவதும் தவறான, முறைகேடான ஒழுங்கு படுத்துதல் ஆகும்.)

**வினா:-** ஞாபகார்த்த விழா கொண்டாடுவதும், அதற்கென்று ஒருதினத்தை நிர்ணயம் செய்வதும் ஷிர்க்காகும். இவையிரண்டும் மீலாது ஷரீபில் இடம் பெற்றிருப்பதால் மீலாது ஷரீப் ஷிர்க்காகும்.

**விடை:-** ஞாபகார்த்த விழா கொண்டாடுவது சுன்னத்தாகும். அதற்கென்றொரு தினத்தை நிர்ணயிப்பதுவும் சுன்னத்தாகும். இவையிரண்டையும் ஷிர்க் என்றுரைப்பது மடமைத்தனமாகும்.

மூஸா நபி அலைஹிஸ்ஸலாத்து வஸலாம் அவர்களுக்கு,....

وَذَكِّرْهُمْ بِأَيَّامِ اللهِ

*'வதக்கிர்ஹும் பி அய்யாமில்லாஹ்'* 14:5 (இஸ்ரவேலர்களான) அவர்களுக்கு அல்லாஹ்வின் உபகாரதினங்களை (ஃபிர்அவ்னை மூழ்கடித்து அவர்களுக்கு ஈடேற்றத்தை கொடுத்தும், மன்னு-ஸல்வா எனும் ஆகாரத்தை இறக்கியருளியும் செய்த உதவிகளை) ஞாபகமூட்டுவீராக என அல்லாஹ் சொன்னான்.

எத்தினத்தில் அல்லாஹ் தன் அருள்மாரியை சொரிந்தும், உபகாரங்களை செய்துமிருக்கின்றானோ அத்தினத்தை ஞாபகார்த்த தினத்தை கொண்டாட வேண்டுமென்பது ஆண்டவன் கட்டளை. இந்த வசனத்தில் இதைத் தெளிவுபடுத்தி இருக்கிறான்.

திங்கட்கிழமை நோன்பு நோற்பது குறித்து பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வினவப்பட்டபோது, அத்தினமே நான் பிறந்தேன். அத்தினமே எனக்கு வஹி இறக்கப்பட்டது எனக் கூறினார்கள். (நூல்: மிஷ்காத் பக்கம் 179)

திங்கட்கிழமை அன்று பெருமானாரின் பிற்ப்பின் சிறப்பிற்காக நோன்பு நோற்பது சுன்னத்தாக்கப்பட்டுள்ளது என்று இதன் மூலம் தரிபட்டு விட்டது.

மேலும் ஞாபகார்த்த நிகழ்ச்சிகள் நடத்துவது அதற்கென்று ஒரு தினத்தை நிர்ணயிப்பது சுன்னத் என்றும்,...

அதிலும் குறிப்பாக உத்தம நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உதய தினத்தில் நோன்பு , நபிலா தொழுகை போன்ற உடல் வணக்கம், அல்லது தனம், தருமம், சீரணி, நேர்ச்சை போன்ற பொருள் வணக்கம் புரிவது சுன்னத் என்றும் அப் பொன்மொழி உணர்த்துகின்றது.

பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், புனித மதீனா நன்நகருக்கு விஜயம் செய்தபொழுது அங்கு 'ஆஷுரா' தினத்தில் யூதர்கள் நோன்பு நோற்கக் கண்டார்கள்.

அப்போது யூதர்களே! நீங்கள் இத்தினத்தில் நோன்பு நோற்கக் காரணமென்ன? என வினவியபோது, 'இறையோன் இத்தினத்தில் பிர்அவ்னை விட்டும் எங்கள் நபி மூஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களை காப்பாற்றினான். அந்நன்றியைப் பாராட்டி நாங்கள் நோன்பு நோற்கிறோம்' என விடையளித்தனர். அப்போது,...

فَنَحْنُ أَحَقُّ وَأَوْلَى بِمُوسَى مِنْكُمْ

*'ப நஹ்னு அஹக்கு-வ-அவ்லா-பி மூஸா மின்கும்'*-மூஸா நபியைக் கொண்டு (பின் தொடர) உரித்தானவர்களும், ஏற்றமானவர்களும் உங்களைக் காண நாங்கள் தான்' என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறி தாங்களும் அன்றைய தினம் நோன்பு நோற்றார்கள். நோன்பு நோற்கும்படியும் ஏவினார்கள்.' (மிஷ்காத் 180)

இதுபோது 'இது யூதர்களுக்கு ஒப்பாகின்றதே என்ற ஐயம் எழுப்பப்பட்டபோது, நான் வரும் ஆண்டு ஜீவித்திருந்தால் ஒன்பதாவது தினத்திலும் நோன்பு நோற்பேன்' என்று சொன்னார்கள். அறவே விட்டு விடாமல் மேலுமொரு நோன்பை கூட்டுவதன் மூலம் யூதர்களுக்கு மாற்றம் செய்யப் போவதாக கூறி ஞாபகார்த்தத்தை நிலை நாட்டினார்கள்.

ஐங்காலத் தொழுகைகள் இரண்டு, மூன்று, நான்கு ரக்அத்துக்களாக வேறுபட்டிருப்பதும் கூட முந்தைய நபிமார்களின் ஞாபகார்த்தங்கள் தான் என்றும், அவ்வல் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் உலகிற்கு வந்து காரிருள் கப்பிய இரவைக் கண்டதும் திகிலடைந்தார்கள். (சொர்க்கத்தில்

அவர்கள் இரவைக் கண்டதில்லை) சுப்ஹு ஆனதும் அதன் நன்றிக்காக இரண்டு ரக்அத் தொழுதார்கள் என்றும்,....

கலீலுல்லாஹ் நபி இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்கள் மகன் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களது உயிர் பலியிடப்படாது தடுக்கப்பட்டு ஆட்டை பலியிடப்பட்ட நன்றிக்காக அந்நேர லுஹர் தொழுகையை நான்கு ரக்அத்துகளாக நிறைவேற்றினார்கள் என்றும்,...

உஜைர் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் நூற்றாண்டுகளுக்குப் பின் உயிர் பெற்றெழுந்த நன்றிக்காக அந்நேர அஸருத் தொழுகை நான்கு ரக்அத்தை நிறைவேற்றினார்கள் என்றும்,...

தாவூது நபி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தங்களது தவ்பா –பாவமன்னிப்பு ம∴ரிபு நேரம் ஒப்புக் கொள்ளப்பட்டது என்ற நன்றிக்காக நான்கு ரக்அத் தொழ வேண்டுமென்று நிய்யத் வைத்து மூன்றாது ரக்அத்தில் சலாம் கொடுத்து நிறைவேற்றினார்கள் என்றும்,....

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விசேஷமாக இஷாத் தொழுகையை நான்கு ரக்அத்துகளாக நிறைவேற்றினார்கள் என்றும், ஆதாரப்பூர்வமான நூற்களின் மேற்கோள்களுடன் நமது 'ஷ∴னே ஹபீபுற்றஹ்மான்' என்ற மற்றொரு நூலில் தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆகையால் கடமையான தொழுகைகள் கூட முந்தைய நபிமார்களின் ஞாபகார்த்தங்கள்தான் என்பது புலனாகிறது.

'ஹஜ்'வணக்கத்தில் ஆதி முதல் அந்தம் வரை இப்றாஹீம், .ஸ்மாயீல், அன்னை ஹாஜரா அலைஹிமுஸ்ஸலாத்து வஸஸஸலாம் ஆகியோரது ஞாபகர்த்தங்களே!

ரமளான் மாதமும், லைலத்துல் கத்ர் இரவும் குர்ஆன் அருளப்பட்டதால் தானே சிறப்புபப் பெற்றன!

குர்ஆன் இறக்கப்பட்டமையால் ரமளான் மாதமும், லைலத்தில் கத்ரும் சிறப்பும், மேன்மையும் பெற்றிருக்கிறது எனும்போது, குர்ஆன் ஷரீபை உடையவரான முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பினால் ரபீயுல் அவ்வல் மாதத்திற்கு அதன் 12-ம் தினத்திற்கு சிறப்பும், கீர்த்தியும், உயர்வும் இறுதி நாள்வரை கிடைத்ததில் விந்தை என்னவிருக்க முடியும்?

இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களின் உயிருக்கு பகரமான ஆட்டை குர்பான் செய்யப்பட்ட தினம் ஈதுப் பெருநாளக்கப்படவில்லையா?

எந்த தினத்தில் இறைவன் தனது அன்பர்களுக்கு தனது அருள்மாரியை சொரிகின்றானோ அந்த தினம், யுக முடிவு நாள்வரை சங்கைமிக்க தினமாகவே கொண்டாடப்படுகிறது.

வெள்ளிக்கிழமை மாண்புறு தினமாக ஆனது முந்தைய நபிமார்களுக்கு அன்றைய தினம் பல அருட்கொடைகள் வழங்கப்பட்டவைகளாகும்.

(உதாரணம்) ஆதம் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் படைக்கப்பட்டது, அமரர்கள் அவர்களுக்கு சிரம் சாய்த்தது, அவர்கள் பூவுலகிற்கு இறக்கப்பட்டது எல்லாம் வெள்ளிக்கிழமையாகும்.

நூஹ் நபி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களது கப்பல் ஜூத் எனும் கரையை அடைந்ததும், யூனுஸ் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மீன் வயிற்றிலிருந்து வெளியேற்றப்பட்டதும், மூஸா அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்கள் ∴பிர்அவ்னிடமிருந்து ஈடேற்றமடைந்தது வெள்ளிக்கிழமையன்றுதான்!

ய∴கூபு அலைஹி அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் தனது அருமை மகனார் யூசுப் அலைஹிஸ்ஸலாத்து வஸ்ஸலாம் அவர்களை மீண்டும் பெற்றதும், யுகம் முடிவதும் வெள்ளிக்கிழமையன்றுதான்.

இதனாலேயே வெள்ளிக்கிழமை ‘ஸெய்யிதுல் அய்யாம்’ நாட்களுக்கு நாயகமானது என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இதைபோன்று எத்தினத்திலாவது, அல்லது எவ்விடத்திலாவது அல்லாஹ்வின் தண்டனைகள் மக்கள் மீது பாய்கின்றதோ அத்தினத்தை அல்லது அவ்விடத்தை பயந்து கொண்டு தவிர்ந்து நடக்க வேண்டும். உதாரணம் செவ்வாய்க்கிழமை இரத்தம் குத்தி எடுக்காதீர்கள். அது இரத்த தினமாகும். ஹாபிழ் கொலையுண்டதும், ஹவ்வா அலைஹிஸ்ஸலாம் அவர்களுக்கு மாதவிடாய் துவக்கமானதும் இத்தினத்தில்தான் என்று ஹதீது ஷரீபில் வந்துள்ளது.

ஆகவே என்றோ ஒருநாள் நன்மை நடந்ததினால் அந்நாள் கடைசி நாள்வரை நன்னாளாகவும், என்றோ ஒருநாள் தீமை நிகழ்ந்ததினால் அந்த நான் துர்நாளாகவும் கொண்டாடப்படுகிறது.

எனவே சான்றோர்களில் மகிழ்ச்சி தினத்தை அல்லது வணக்கத்தை ஞாபகர்த்த தினமாக கொண்டாடப்படுகிறது.

நமக்கு எதிரிடையாக இருந்து வருபவர் (களான தப்லீக்கர்)கள் கூட இன்றளவும் (இந்திய நாட்டின் வஹ்ஹாபி தலைவன்) இஸ்மாயில் திஹ்லவியின் ஞாபகார்த் தினத்தையும் (அவனது சிஷ்ய கோடி பக்தர் தேவுபந்து மத்ரஸா ஸ்தாபகர்) காஸிம் நானூத்தவியின் ஞாபகார்த்த தினத்தையும் கொண்டாடி வருகின்றனர்.

இவ்வாறான ஞாபகார்த்த தினத்தை நிர்ணயம் செய்வதும், தேதி குறிப்பிடுவதும் கூடாது -ஷிர்க்கு என்றிருக்குமானால் (தப்லீகர்களின் மத்ரஸாவான) தேவுபந்து மத்ரஸாவில் பரீட்சைக் காண தேதி நிர்ணயமும், விடுமுறைக்கா ரமலான் மாதத்தை ஒதுக்குவதும், பட்டப்படிப்பிற்காக உயர்

வகுப்புகளை ஏற்பாடு செய்வதும், ஆசிரியர்களுக்கு சம்பளத்தை நிர்ணயிப்பதும், உண்ணுவதற்கும், உறங்குவதற்கும், தொழுகை ஜமாஅத்திற்கும் கால அட்டவணை தயார் செய்வதும், வதுவை நாள் குறிப்பும், வலீமா அகீகாவிலிருந்து அறிவிப்பும் எதுவுமே ஷிர்க்கை விட்டும் தப்ப இயலாது. மீலாது ஷரீபை 'ஷிர்க்கு' ஆக்கும் ஆசையில் தன் குடியிருப்பிடத்திற்கு கூட குறிப்பிட்ட சமயம் விளக்கேற்ற மாட்டான் போலும். இக்குறிப்புகளும், நிர்ணயங்களும் வெறும் வழக்கங்கள். இவைகளினால் ஷிர்க்கு வந்து விடாது.

குறிப்பிட்ட தினத்தில்தான் ரபீவுல் அவ்வல் 12-ஆம் நாளில்தான் மீலாது ஷரீப் கொண்டாட வேண்டும். ஏனைய தினங்களில் கொண்டாடலாகாது என்று எவரும் விளங்க மாட்டார்கள்.

இதன் அடிப்படையில் எங்களது உ.பி. பிரதேசத்தில் முஸீபத்து-சோதனைகள் வந்து விட்டால் (அவை நிவர்த்தியாக நாடி) மீலாது ஷரீப் கொண்டாடுகின்றனர்.

அதிலும் 'காடியாவாடு' என்னுமூரில் திருமண நாளன்றும், மூன்றாம், பத்தாம், நாற்பதாம் நாட்கள் பாத்திஹா அன்றும் மீலாது ஷரீபு கொண்டாடுகின்றனர்.

பின்பு ரபீவுல் அவ்வல் 12ம் நாள் தேவுபந்தியாக்களை தவிர மற்றவர்கள் உல்லோரும் பரவலாக பல்வேறு இடங்களில் சமயங்களில் மீலாது ஷரீப் கொண்டாடுகின்றனர்.

தேவுபந்தியாக்களில் ரபீவுல் அவ்வல் மாதம் தவிர்த்து ஏனைய மாதங்களில் மீலாது ஷரீபு கொண்டாடி வருவதாக செவி வழிச் செய்தி அறிவிக்கின்றது. (தேதி, நாள், குறிப்பு ஆகாது என்று பிதற்றி வருவதாக நானும் கேள்விப்படுகிறேன்)

ஹோலி பண்டிகைகள், தீபாவளிப் பண்டிகைகள்(பொங்கல் பண்டிகை) போன்று விக்ரக ஆராதனைகளோடு ஒட்டிய நிர்ணயமாக இருப்பின் அது தடையாகும். இப்பண்டிகைகளை கண்ணியப்படுத்துதல் வேண்டி அதற்கென்று குறிப்பான உணவுகளை சமைத்தல் கோவில்களுக்குச் சென்று தருமம் வழங்குதல் போன்றவை தடுக்கப்பட்டவைகளாகும்.

இது சம்பந்தமாக 'மிஷ்காத்' 298-ஆம் பக்கத்தில் வரையப்பட்டுள்ளது. 'புவனா' என்னுமிடத்தில் ஒட்டகை ஒன்றை அறுத்து பலியிடுவதாக ஒருவர் நேர்ச்சை வைத்தார். அதை நிறைவேற்ற விரும்பி பெருமானாரிடம் அனுமதி கேட்டு நின்றபோது, அவ்விடத்தில் அஞ்ஞான காலத்து விக்ரகங்களில் ஏதாவதொன்று இருக்கிறதா? அல்லது அவர்களது பண்டிகைகளில் ஏதாவதொரு பண்டிகை அங்கு நிகழுமா? என வினவினார்கள். இல்லை இல்லை என்ற விடை பகர்ந்தபோது, உமது நேர்ச்சையை அவண் சென்று நிறைவேற்றுவீராக என்று பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விடை பகர்ந்தார்கள்.

இந்நிர்ணயம் அவிசுவாசிகளுடன் ஒப்புவமையானால் அல்லத அத்தினத்தில் செய்வதுதான் கடமை என்ற நம்பிக்கை இருக்குமானால் இதுவும் தடையாகும். இது குறித்து மிஷ்காத் 179-வது பக்கத்தில் காணக் கிடைக்கின்றது.

வெள்ளிக்கிழமை நோன்பு நோற்பதற்கென்று குறிப்பிடாதீர்கள். அதன் முன் தினத்தையோ அல்லது பின் தினத்தையோ சேர்த்து நோன்பு நோற்றாலோ ஒழிய, என்று நபிகள் நவின்றுள்ளார்கள்.

இதற்குப் பல காரணங்கள் வரைந்துள்ளார்கள் விரிவுரையாளர்கள். யூதர்கள் சனிக்கிழமை மட்டும், கிறித்துவர்கள் ஞாயிற்றுக் கிழமை மட்டும் நோன்பு நோற்பது போன்று வெள்ளிக்கிழமை மட்டும் நீங்கள் நோன்பு நோற்று அவர்களுடன் ஒப்புவமையாக்காதீர்கள். பாகுபடுத்திக் காட்டுங்கள் என்ற கருத்தில் அப்படி சொன்னார்கள் என்பது அக்காரணங்களில் ஒன்று.

வெள்ளிக்கிழமை நோன்பு நோற்பதை வாஜிபு என்று நம்பி விடுவார்கள் என்ற அச்சத்தால் தடுத்தார்கள் என்று சொல்வது மற்றொரு விளக்கம்.

வெள்ளிக்கிழமை பெருநாள் தினம் அதில் நோன்பு நோற்பது நல்லதன்று என கருதினார்கள் என்று கூறுவது இன்னுமொரு விளக்கம்.

இவை போன்ற காரணங்கள் இருக்கும்போதுதான் நாட்களையோ, இடத்தையோ குறிப்பிடுதல் தடையாகும். இன்றேல் தடையில்லை.

மீலாது ஷரீபு கொண்டாடுவது கூடாதென்று வாதம் புரிந்தவர்களின் வினாக்களெல்லாவற்றுக்கும் தகுந்த விடையளித்தும் விளக்கங்கள் கொடுத்தும் முடிந்து விட்டதினால் மீலாதுஷரீபை தடை செய்யும் பலமான ஆதாரங்கள் அவர்களிடம் ஸ்டாக் இல்லை என்பது வெள்ளிடைமலை. அதுவே மீலாது ஆகுமென்பதற்கு தக்க ஆதாரமாகும்.

விதண்டாவாதம் புரிந்திடுவோர் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள ஒரு பாடல்:

*அழிவு பட்டது, அழிவு படுகின்றது. அழிவு படவே செய்யும் உனது விரோதம்.*
*அழியாது அழிவு படாது ஒரு போதும் உனது சர்ச்சை.*

(எனவே வீண் விதண்டாவாதம் செய்யாமல் விரோத குரோதங்களை விட்டுவிட்டு, கண்ணியத்தோடும், புண்ணியம் கிட்டுமென்ற நன்னோக்கத்தோடும், குதூகலமாக பெருமானாரின் பிறந்த தின விழா, மீலாது ஷரீபை கொண்டாடி மகிழ்ந்திடுவோம். அன்னாரின் பேரன்பைப் பெற்றிடுவோம். இறையருளையும் அடைந்திடுவோம். வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

*முற்றும்.*